433—

கண்ணநல்லூரில் பாலம் கட்டுதல்.

*14469—திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, கண்ணநல்லூரில் பாலம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் தளபதி சமுத்திரம்-கண்ணநல்லூர் சாலை (அரசு, இதர மாவட்ட சாலை) எனும் 7.6 கி.மீ. (கி.மீ. 0-0-7/6) நீள முடைய சாலையில் கி.மீ. 7/6-ல் கண்ணநல்லூர் ஊருக்கு முன்பாக நம்பியாற்றின் குறுக்கே கட்டப்படவேண்டும். இப்பணிக்கு சுமார் ரூ. 35.00 லட்சம் தேவைப்படும், இப் பணி அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பணித்தொகுப்புப் பட்டியலில் (Shelf of Projects) இடம் பெற்றுள்ளது. எனினும் பகுதி 2 திட்டங்களுக்கு அரசு குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்வதால் இப்பணியை அண்மைக் காலத்தில் பகுதி 2 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை,

436—

அம்பத்தூரில் மாவட்டக் கூட்டுறவு வங்கியின் கிளை.

*9306—திரு. கோ. காவன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பத்தூரில் மாவட்ட கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றைத் திறக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

அம்பத்தூரில் காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கிக் கிளை திறக்க கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.